# குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009

## கலந்துரையாடல்

**நாள் : 31.01.2014, வெள்ளிக்கிழமை** **இடம் : ஓட்டல் ஜானகிராம், திருநெல்வேலி**

### தீர்மானங்கள்

1. குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் சிறப்பு அம்சங்களை பொது மக்களுக்கு விளக்கும் வகையில் பள்ளிகளில் விளம்பரப் பலகைகளை அமைத்திட பள்ளிக் கல்வித் துறை அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பிட வேண்டும்.
2. இச்சட்டத்தின்படி அமைக்கப்பட வேண்டிய பள்ளி மேலாண்மைக் குழுக்கள் முறையாக அமைக்கப்படாத பள்ளிகளில் உடனடியாக இக்குழுக்கள் அமைக்கப்படுவதை பள்ளிக் கல்வித் துறை உறுதி செய்திட வேண்டும். இவ்வாறு முறையாக உருவாக்கப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் இக்கல்வி ஆண்டு இறுதிக்குள் (மார்ச் - ஏப்ரல் 2014) இச்சட்டம் குறித்த இரண்டு நாள் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
3. கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான 3 ஆண்டு கால அளவு முடியும் சூழலில் அதனை முழுமையாக அமல்படுத்த தமிழக அரசு உளப்பூர்வமான நடவடிக்கைகளை உறுதியாக எடுக்க வேண்டும். அதற்கான போதிய நிதி ஒதுக்கீட்டை தமிழக அரசு செய்ய வேண்டும். இச்சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் முழுமையாக தொடர்ந்து அமல்படுத்தாத பள்ளிகள் மீது தமிழக அரசு / பள்ளிக் கல்வித்துறை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பள்ளிகளின் செயல்பாட்டை அந்தந்தப் பகுதி உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் முறையாக கண்காணிக்க வேண்டும். பள்ளிகளின் உண்மையான வளர்ச்சியில் இம்மன்றப் பிரதிநிதிகள் உரிய கவனம் செலுத்தி, ஆக்கப்பூர்வமான முறையில் பள்ளிகளின் மேம்பாட்டுக்குத் தங்களது பங்களிப்பைச் செய்திட வேண்டும்.
5. இச்சட்ட விதிமுறைகளின் படி அரசு நிர்ணயித்த தொகையைவிட கூடுதலாக கட்டண வசூல் செய்யும் தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தை பள்ளிக் கல்வித் துறை உடனே ரத்து செய்ய வேண்டும்.
6. இச்சட்டத்தின்படி 25% இடங்களை ஏழை, எளிய, நலிவுற்ற பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஒதுக்கீடு செய்யாத தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தை பள்ளிக் கல்வித்துறை உடனே ரத்து செய்ய வேண்டும். தங்களது பள்ளிகளில் கடந்த ஆண்டு 25% இடங்களில் மேற்குறிப்பிட்டபடி முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்களை அந்தந்தப் பள்ளிகளின் தகவல் பலகைகளில் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.
7. இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்ட நடைமுறையாக்கத்தைக் கண்காணிக்க, கல்வியாளர்கள், மனித உரிமை மற்றும் குழந்தை உரிமை ஆர்வலர்கள் அடங்கிய மாவட்ட அளவிலான, சுதந்திரமான குழு ஒன்றை தமிழக அரசு நியமிக்க வேண்டும்.

8. சாதி, மத ரீதியிலான பாகுபாட்டு உணர்வுகளை பள்ளி மாணவ மாணவியரிடம் களைய பள்ளிகளில் போதிய விழிப்புணர்வை வழங்க பள்ளிக் கல்வித் துறை ஏற்பாடு செய்ய வேண்டும்.

9. குழந்தைகளின் தாய்மொழியிலே பயிற்று மொழி அமைய வேண்டும் என்ற இச்சட்ட விதிமுறைகளுக்கு முரணாக தமிழக அரசு இவ்வாண்டு அறிமுகப்படுத்தியுள்ள ஆங்கில வழி பயிற்று மொழி வகுப்புகளை நிறுத்திட வேண்டும். மாறாக பள்ளிகளின் தரத்தை மேம்படுத்திட உள்கட்டுமான வசதிகளுக்கு போதிய ஒதுக்கீடு செய்து, குழந்தைகளின் கல்வியை தரமானதாக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

10. தமிழகத்தின் பின்தங்கிய பகுதிகளில் மத்திய அரசு கொண்டு வரத் திட்டமிட்டிருக்கும் மாதிரிப் பள்ளிகள் மாணவ, மாணவியர் மத்தியில் ஏழை – பணக்காரன் என்ற பாகுபாட்டை இன்னும் அதிகரிக்க வழிவகுக்கும். தனியார் ஆதிக்கத்தை நிலைநாட்டி, கல்வி வணிகமயமாக்கும் சூழலை மேலும் அதிகரிக்கவே இது பயன்படும். எனவே இந்த தனியார் - பொது கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மத்திய அரசு தொடங்கவிருக்கும் இந்த மாதிரிப் பள்ளிகளை உடனே நிறுத்திட வேண்டும்.

11. தனியார் பள்ளிகளில் சேர்க்கை தொடர்பான பணிகள் ஏப்ரல் முதல் தேதிக்குப் பின்னர் தான் தொடங்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு கறாராக ஆணை பிறப்பிக்க வேண்டும்.

12. குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் வகையில் 2012-ல் இயற்றப்பட்ட பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்வை பள்ளிகளில் கொண்டு செல்ல பள்ளிக் கல்வித்துறை முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

13. 100 விழுக்காடு தேர்ச்சி என்ற நோக்கில் 10, +2 - ஆம் வகுப்புப் படிக்கும் கல்வியில் பின்தங்கிய மாணவ மாணவியரை தங்களது பள்ளி சார்பில் தேர்வு எழுத அனுமதி மறுத்து, அப்படிப்பட்ட மாணவ மாணவியரை கல்வியாண்டு இடையிலே வெளியேற்றும் தனியார் பள்ளிகளின் போக்கை பள்ளிக் கல்வித்துறை உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.

14. அரசுப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் விலையில்லாப் பொருட்களை (பாடபுத்தகம், சீருடை, காலணி, புத்தகப்பை) குறித்த காலத்தில் பள்ளிகளுக்கே பள்ளிக்கல்வித்துறை நேரடியாக வழங்க வேண்டும்.

15. அரசுப் பள்ளிகளுக்கு கழிவறை, சிறுநீர் கழிவறை மற்றும் சுகாதார மேம்பாட்டு வசதிகளுக்கு நிதிஉதவி செய்வது போன்று அரசு மானியம் பெறும் பள்ளிகளுக்கும் அரசு நிதிஉதவி செய்து அப்பள்ளி மாணாக்கர்களின் சுகாதார வசதியை அரசு உறுதி செய்ய வேண்டும்

---

## வான்முகில் திருநெல்வேலி

## மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம்